யென்றால், இவர்களினாலே மக்களுடைய செல்வாக்கை பெற முடியவில்லை. குழப்பத்தை உண்டாக்குகிறார்கள். சீர்குலைவை உண்டாக்குகிறார்கள், அராஜகத்தை உண்டாக்குகிறார்கள். பஸ்களை, பொதுச் சொத்துக்களை சேதம் ஆக்குகிறார்கள். இப்படிப்பட்ட தீய சக்தியை அடக்க வேண்டுமென்பதற்காகத் தான் போற்றுதலுக்குரிய புரட்சித் தலைவி அவர்கள் இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டுவந்து இருக்கிறார்கள். ஒரு மனதாக நீங்கள் ஆதரவு நல்கி, இதை நிறைவேற்றித்தர வேண்டுமென்று மிக்க டணிவன்போடு போற்றுதலுக்குரிய நம்முடைய பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள், சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தரக் கோருகிறேன் என்று கோருங்கள்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுச் சொத்து (சேதம் மற்றும் இழப்பைத் தடுத்தல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 22/1992) நிறைவேற்ற பெற வேண்டும்.''

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை.)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.
(மேசையைத் தட்டும் ஒலி).

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ஈ) நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் 1992-ம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (எண் 3) சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 33/1992) மாண்புமிகு நிதி அமைச்சர்.

1992 ஏப்ரல் 27]

பிற்பகல் 6–10

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'' 1992—ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவு சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 33/1992) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும் '' எனக் கோருகிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்ட முன்வடிவுகள் முன்மொழியப்படுகிறபோது உறுப்பினர்கள் அனைவரும் அமர வேண்டும். திரு. சத்தியமூர்த்தி அமர வேண்டும்.

மாண்புமிகு நிதியமைச்சரவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ' ஆம் ' என்க. (ஆம்)

மறுப்போர் ' இல்லை ' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, இணைப்புப் பட்டியல் முடிய திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3, இணைப்புப் பட்டியல் சட்ட முன் வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ' ஆம் ' என்க. (ஆம்)

மறுப்போர் ' இல்லை ' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

[பேரவைத் தலைவர்] [1992 ஏப்ரல் 27

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன் வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'' 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 33/1992) நிறைவேற்றப் பெற வேண்டும் ''
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

(மேசையைத் தட்டும் ஒலி).
சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(உ) நிதி ஒதுக்க (எண் 4) சட்டமுன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/1992). மாண்புமிகு நிதி அமைச்சர்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

'' 1992-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 34/1992) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்''
எனக் கோருகிறேன்.